**வி.இ.நா.செந்திக்குமார நாடார் கல்லூரி, (தன்னாட்சி) விருதுநகர்**

**கொடைவள்ளல் உயர்திரு.ச.வெள்ளைச்சாமி நாடார் அறக்கட்டளை**

நடத்தும்



# திருவள்ளுவர் தின விழா

அன்புடையீர்,

வணக்கம். எங்கள் கல்லூரியில் தொடர்ந்து பல ஆண்டுகளாகக் கொடைவள்ளல் உயர்திரு.ச.வெள்ளைச்சாமி நாடார் அறக்கட்டளை சார்பில் கொண்டாடப்பட்டு வரும் **திருவள்ளுவர் தினவிழா** இவ்வாண்டு **பிப்ரவரி மாதம் 25-ஆம் நாள் வெள்ளிக்கிழமை**யன்று மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட உள்ளது. இந்த விழாவினையொட்டி கல்லூரிகளுக்கு இடையிலான **பேச்சு, கட்டுரை, கவிதை, கோலம் மற்றும் திருக்குறள் எழுதும் போட்டி**கள் நடத்தப்பட உள்ளன.

போட்டிகளில் அதிகப் புள்ளிகளைப் பெறும் கல்லூரிக்குக் **கொடை வள்ளல் உயர்திரு ச.வெள்ளைச்சாமி நாடார் நினைவுச் சுழற்கேடயம்** வழங்கப்படும்.

தங்கள் கல்லூரியின் சார்பில் **கோலப் போட்டி**க்கு **இருவரை**யும் ஏனைய நான்கு போட்டிகளுக்குத் தலா ஒருவர் என **நால்வரை**யும் சேர்த்து மொத்தம் **ஆறு** போட்டியாளர்களைக் கலந்து கொள்ளச் செய்து விழாவினைச் சிறப்பிக்க வேண்டுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

**விழா ஒருங்கிணைப்பாளர்** **கல்லூரி முதல்வர்**

போட்டிகள் குறித்தத் தகவல்கள்

நாள் : **25/02/2022** கிழமை : **வெள்ளிக்**கிழமை

நிகழ்விடம் : நூலக மேல்மாடி பொழுது : காலை **09.15** மணி

1. அனைத்துப் போட்டிகளின் உள்ளடக்கமும் திருக்குறள் தொடர்பானதாகவே அமைந்திருக்கும்.
2. பேச்சுப் போட்டிக்குரிய தலைப்பு : **"சொல்லேர் உழவர் பகை"**
3. கட்டுரை, கோலம் மற்றும் கவிதைப் போட்டிக்குரிய தலைப்பு, போட்டி நாளன்று வழங்கப்படும்.
4. திருக்குறள் எழுதும் போட்டி - பிழையின்றி, அதிக எண்ணிக்கையில் திருக்குறள் எழுதுதல் வேண்டும்.
5. ஒருவர் ஒரு போட்டியில் மட்டுமே பங்கேற்க முடியும்.
6. பதிவுக் கட்டணம் கிடையாது. பங்கேற்பாளருக்கு மதிய உணவு வழங்கப்படும்.

போட்டிகளில் பங்கேற்கும் பங்கேற்பாளர்கள் குறித்தத் தகவலை **23/02/2022,** புதன்கிழமைக்குள்


**பேரா. சோ.ஹரிபாண்டிராஜன்,**

உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதி),

வி.இ.நா.செ.நா.கல்லூரி(தன்னாட்சி), விருதுநகர் - 626 001.


என்ற முகவரி/ **99943-07322** (கட்செவி எண்) என்ற அலைபேசியில் உறுதிப்படுத்த வேண்டுகின்றோம்.